பக்கங்கள்:-14

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 02 | புதன்கிழமை | 15.01.2025 | அதிர்வு 166

# போலி வைத்தியர்களை சிறையில் அடைப்போம்

## சுகாதார அமைச்சர் திட்டவட்டம்

போலி வைத்தியர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் 03

# சீன ஜனாதிபதியுடன் அநுர இன்று சந்திப்பு



சீனாவுக்கு நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று புதன்கிழமை பிற்பகல் சீன 05

# இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உறுதி



இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்போம் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உறுதியளித்தார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கடந்த அரசு போல் 05


# 13 இல் கைவைக்கமாட்டோம்

## இந்தியாவில் வைத்து அமைச்சர் சந்திரசேகர் அறிவிப்பு



“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தமிழ் மக்கள் தமக்குக் கிடைத்த உரிமையாகக் கருதுகின்ற நிலையில் அதில் கைவைப்பதற்கு நாங்கள் முனையவில்லை.”

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். 05



# அநுர அரசை விரட்டியடிக்க மக்கள் தயாராம்

## மஹிந்த கூறுகின்றார்

“போலி வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த கும்பலை விரட்டியடிக்க மக்கள் தயாராகி வருகின்றனர்.” 05

# தோற்றவர்கள் சங்கமிப்பதால் எந்தவித மாற்றமும் ஏற்படாது!

## ரணில் - சஜித் இணைவுக்கான முயற்சி குறித்து அமைச்சர் லால் காந்த கருத்து



ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவதால் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்று அமைச்சர் கே.டி.லால் காந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ரணிலின் கட்சியும், சஜித்தின் கட்சியும் தேர்தல்களில் படுதோல்வியடைந்த கட்சிகள். இவ்விரு கட்சிகளும் இணைவதால் அந்தக் கட்சிகளில் அல்லது நாட்டில் எந்தவித மாற்றமும் 05




முன்னர் வடக்கு அரசியலில் கூட்டுறவுத் துறைக்கு கணிசமான பங்களிப்பு இருந்தது. வடக்கு அரசியலில் ஒளிர்விட்ட பல அரசியல்வாதிகள் கூட்டுறவுத் துறையில் இருந்து மேலெழுந்தவர்கள்தான்.

வடக்குக் கூட்டுறவு துறையின் பிதாமகர் என்று போற்றப்படும் வீரசிங்கம் பிற்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அவருடைய பெயரில்தான் இப்போதும் யாழ் நகரின் மத்தியில் வீரசிங்கம் மண்டபம் எழுந்து நிற்கிறது.

தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராஜாவில் இருந்து கட்சியின் இப்போதைய பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வரை பலரும் கூட்டுறவுத் துறையில் இருந்துதான் அரசியலுக்குள் நுழைந்தவர்கள்.

ஒரு காலத்தில் கூட்டுறவுத் துறையின் பிரதிபலிப்பு அரசியலில் காத்திரமாக எதிரொலிக்கும் நிலைமை இருந்தது. அதுவும் உள்ளூராட்சித் தேர்தல்களில் கூட்டுறவுத் துறையின் தாக்கம் ஆணித்தரமாக தென்படுவது வழமை. 05








# வல்வையில் கோலாகலமாக நடந்த பட்டத் திருவிழா

**(பிரபாகரன் டிலக்சன்)**

வல்வை சர்வதேச விநோத பட்டத் திருவிழா, தைப்பொங்கல் தினமான நேற்று மிகவும் கோலாகலமாக வல்வை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நடைபெற்றது.

வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையம் மற்றும் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் விமலதாஸ் கவிச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன், கௌரவ விருந்தினராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற செயலாளர் சத்தியநாதன் கிசோக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது விநோதமான பட்டங்கள் பறக்கவிடப்பட்டன.












# நாட்டின் தாழ்நில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன



நாட்டின் பல பகுதிகளில் 75 மில்லி மீற்றர் வரை மழை வீழ்ச்சி பதிவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கிழக்கு, ஊவா, மத்திய, தென் மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்தின் பல இடங்களிலும் 75 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 மில்லி மீற்றர் வரை காற்று வீசக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

இதனால் சித்தாண்டி, வந்தாறுமூலை உள்ளிட்ட தாழ்நில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இரம்புக்கனை ஓயா மற்றும் மாதுரு ஓயா வான்கதவுகள் திறக்கப்பட்டதையடுத்து கிரானிலிருந்து குடும்பிமலைக்கு செல்லும் பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

நீர்ப்பிரவாகம் அதிகரித்துள்ளமையால் கிரான் பிரதேச செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினூடாக இயந்திரப் படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முந்தணை ஆற்றிலிருந்து வருகின்ற அதிக நீர் காரணமாக சித்தாண்டி பகுதியை அண்மித்த தாழ்நில பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

செங்கலடி செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஈரளக்குளம் கிராம சேவகர் பிரிவிற்கு செல்லும் சித்தாண்டி முதல் சந்தனமடு ஆறு வரையான தரைவழி போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதனால் சித்தாண்டியிலிருந்து 2 மில்லி மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள பெருமாவெளிபகுதி வரை இயந்திர படகுச்சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு – களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட களுவாஞ்சிக்குடி, எருவில், குருமன்வெளி உள்ளிட்ட பல தாழ்நிலப்பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனிடையே, பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்ந்தும் பலத்த மழை பெய்து வருகின்றது.

பண்டாரவளை இருந்து வெலிமடை செல்லும் பிரதான வீதியில் மாதாட்டில்ல பகுதியில் பாரிய மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் குறித்த பிரதான வீதியின் ஒரு பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்த வீதியை பயன்படுத்தும் வாகன சாரதிகள் அவதானத்துடன் வாகனத்தை செலுத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சோமாவதி சுங்காவில் வீதி மூடப்பட்டுள்ளதால் சோமாவதி புனித நகருக்கு யாத்திரைக்காக சென்றவர்கள், பஸ்களின் மூலம் வெலிகந்த ஊடாக திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விபத்துகளை தடுக்கும் வகையில் பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நிலவும் பலத்த மழையுடன் மகாவலி ஆற்றின் நீர்மட்டம் உயர்வடைவதால், சோமாவதி சுங்காவில வீதி சோமாவதி புனித நகருக்கருகிலுள்ள சோமாவதி திக்கல பகுதியில் மூடப்பட்டுள்ளது.

அப்பகுதியில் சுமார் 2 மில்லி மீற்றர் பகுதி நீரில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

## சம்மாந்துறையில் சோகம்

(பாறுக் ஷிஹான்)

வீட்டில் வழமையான செயற்பாட்டில் ஈடுபட்ட வேளை மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த அனர்த்தத்தில் சிக்குண்டு சம்மாந்துறை, சென்னக்கிராமம் – மலையடிக்கிராமம் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய குடும்பஸ்தரே மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## போலி வைத்தியர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறுகையில்,

"வடக்கு உட்பட நாட்டின் 9 மாகாணங்களிலும் போலி வைத்தியர்கள் சிலர் கடமையாற்றுகின்றார்கள். அவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மருத்துவத்துறை மகத்தானது. போலி வேடம் தயாரித்து எவரும் மருத்துவத்துறைக்குள் உள்நுழைய முடியாது. மக்களின் உயிருடன் விளையாட எவருக்கும் இடமளிக்க முடியாது."

– என்றார்.



# சீகிரியாவிற்கு சுற்றுலா சென்றிருந்த வெளிநாட்டுப் பிரஜை உயிரிழப்பு

சீகிரியாவிற்கு சுற்றுலா சென்றிருந்த போது ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செக் குடியரசைச் சேர்ந்த 54 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

சீகிரியாவுக்கு நேற்று காலை சென்றிருந்த போது மேற்படி பெண்ணுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவர் சீகிரியா - கிம்பிஸ்ஸ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேற்படி, பெண் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

# சுகாதாரத் தொழிற்துறையினரின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



சுகாதாரத் தொழிற்துறையினரைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கப்படும் எனச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார தொழிற்சங்கங்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், பணியாளர்களுக்குத் தொழில்முறை வசதிகளையும், உரிய பணிச்சூழலையும் வழங்குவது சுகாதார அமைச்சின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் எனவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# டிஜிட்டல் அடையாள அட்டைகளை அடுத்த மாதம் முதல் வழங்க நடவடிக்கை



அடுத்த மாதம் முதல் டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், அடையாள அட்டைகளைப் பெறுவதில் ஏற்கனவே குறிப்பிடத்தக்கத் தாமதம் ஏற்பட்டுள்ளதால், இந்த மாதத்திற்குள் பணிகளை நிறைவுசெய்ய உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இத்தகைய ஒரு போக்குக் குறித்து தென்னிலங்கையில் இருந்து இப்போது செய்திகள் வெளியாகி வருகின்றன.

பல இடங்களிலும் கூட்டுறவுத் துறையிலும் அரசியல் கட்சிகளின் நேரடி பங்களிப்புகள் இடம்பெறுகின்றன.



களனிய மற்றும் பியகம போன்ற பல இடங்களில் இப்போது நடந்து முடிந்த கூட்டுறவுச் சபைத் தேர்தல்களில் பலவற்றிலும் தேசிய மக்கள் சக்தியிலும் விட அதிக வெற்றிகளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பெற்றிருப்பதாக செய்திகள் கிடைக்கின்றன.

2015இல் அரசியலில் இருந்து துடைத்தெறியப்பட்ட ராஜபக்ஷக்கள் மூன்று ஆண்டுகள் கழித்து உள்ளூராட்சி தேர்தல்கள் மூலம் புனர்ஜென்மம் எடுத்தமை போல் அண்மையில் ஜனாதிபதி தேர்தலிலும் பின்னர் பொதுத் தேர்தலிலும் கோட்டை விட்டு ஐக்கிய மக்கள் சக்தி, மீளெழுச்சி பெறுவதற்கான ஆரம்ப சமிக்ஞைகளாக இந்தக் கூட்டுறவுச் சபைத் தேர்தல்களைக் கருத முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதே வேளை –

அம்பாந்தோட்டை மாவட்டம் அங்குனு கொலபெலச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை முழுமையாக தோற்கடித்து ஒன்பது இடங்களையும் மொட்டுக் கட்சி சுவீகரித்திருத்திருக்கின்றது.

இதே சமயம் மஹர கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிடத்தக்க அளவான கணிசமான வெற்றியை ஈட்டி இருப்பதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

\+ + +

அரசியல்வாதிகள் அமரும் ஆசனம் குறித்து கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தனது குசு குசு செய்தி பக்கத்தில் வெளியிட்ட ஒரு தகவலின் சாரம் இது:-

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் 'ஒரு மாவீரர்(?) எம்.பி.' அமர்ந்து சலசலப்பை ஏற்படுத்திய பின்னணியில், பிரதமர் ஹரிணி அமரசூரியாவுக்கு அத்தகைய நிலை வந்து விடக்கூடாது, அதற்கு வாய்ப்பளித்து விடக் கூடாது என்ற கருத்தில் அவரின் பெண் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஒரு நிகழ்வில் முன்னேற்பாடாக ஒரு வேலை செய்தார்.

கடந்த வாரம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற பெண் தொழில் முனைவோர் பாராட்டு நிகழ்வின் போது இச்சம்பவம் இடம் பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினரான பிரதமர் ஹரிணி அமரசூரிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் அம்மையாருக்கு அருகில் நாற்காலியில் அமர வேண்டும். தப்பித்தவறி அமெரிக்கதூதுவருக்கு பக்கத்தில் 'மாவீரர் எம்.பி.' மாதிரி யாரேனும் வந்து அமர்ந்து விடக்கூடாது, அதற்கு வாய்ப்பளிக்க இடம் அளிக்கக் கூடாது என்பதற்காக பிரதமர் வந்து தமக்குரிய கதிரையில் அமரும் வரை அந்த கதிரையில் பிரதமரின் பெண் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் முற்கூட்டியே வந்து அமர்ந்து கதிரையைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்தார்.

– இந்தச் சாரப்பட அந்த செய்தி வெளியாகியிருந்தது. அதில் நமது 'மாவீரர் எம்.பியின்' மவுசும் கொடிகட்டி பறந்தது. இனி என்ன? அவரின் ரசிகர்களான நமது ஆன்ட்டிமார் இதனைப் பெருமையாகக் கூறிக் கொண்டாட்டம் நடத்தலாம்...!

## 13 இல் கை வைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த அவர் தமிழகத் தொலைக் காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக நாங்கள் என்ன கருதுகின்றோம் என்பதை விடவும் தமிழ் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

தமிழ் மக்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தமக்குக் கிடைத்த உரிமையாகக் கருதுகின்றார்கள் என்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்துள்ளது.

அதனடிப்படையில்தான் நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதனை உள்ளீர்த்திருந்தோம்.

அதுமட்டுமன்றி, 13ஆவது திருத்தச் சட்டம் நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசமைப்பிலும் காணப்படுகின்றது.

அந்தவகையில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தவுள்ளதோடு அதனையடுத்து இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுக்கும் விடயமாக 13ஆவது திருத்தச் சட்டத்தையும், மாகாண சபை முறைமையும் கருதுகின்றபோது அதனை அர்த்தபுஷ்டியான நிர்வாகக் கட்டமைப்பாகச் செயற்படுத்திப் பார்ப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

ஆகவே 13ஆவது திருத்தச் சட்ட விடயத்தில் எமது நிலைப்பாட்டை விடவும் தமிழ் மக்களின் நிலைப்பாடே முக்கியமானது. அதேநேரம், தோழர் அநுரகுமார தலைமையிலான அரசானது அனைத்து மக்களின் ஆணையுடனேயே ஆட்சிப் பொறுப்பைப் பெற்றுள்ளது. இதனால், அது அனைத்து மக்களுக்குமான அரசாகச் செயற்படவுள்ளதோடு, மக்கள் நலன்களுக்கே முக்கியத்துவம் அளிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்."

– என்றார்.

## சீன ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி சீ ஜின்பிங்கை சீன மக்கள் மண்டபத்தில் சந்திக்கவுள்ளார்.

இலங்கை ஜனாதிபதிக்கும் சீன ஜனாதிபதிக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுகளின் பின்னர் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கை - இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் ஆதாயம் தேட எமது அரசு முயலாது. இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காண்போம்.

மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்திய மத்திய அரசுடன் ஏற்கனவே பேசிவிட்டோம். தொடர்ந்தும் பேசுவோம்.

இரு நாட்டு மீனவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்வு காண்போம்."

– என்றார்.

## அநுர அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

"இனிவரும் தேர்தல்கள் எமக்கு வெற்றி வாய்ப்புக்களையே பெற்றுத் தரும். நாம் மீண்டெழுவோம்." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வீழ்ந்துவிட்டது, இனி அந்தக் கட்சிக்கு மீள் எழுச்சி இல்லை என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது.

இறுதியாக நடைபெற்ற இரண்டு தேர்தல்களும் எமக்குத் தோல்விகளைத் தந்தாலும் நாம் அதனைப் படிக்கற்களாக மாற்றியுள்ளோம்.

இனிவரும் தேர்தல்கள் எமக்குச் சாதகமாகவே அமையும். அதாவது அந்தத் தேர்தல்கள் எமக்கு வெற்றி வாய்ப்புக்களையே பெற்றுத் தரும். நாம் மீண்டெழுவோம்.

தேர்தலின்போது போலி வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த கும்பலை விரட்டியடிக்க மக்கள் தயாராகி வருகின்றனர்." – என்றார்.

## தோற்றவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்படாது.

இந்தக் கட்சிகளின் இணைவு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஒருபோதும் சவாலாக அமையாது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனிச் சிறப்பு இருந்தது. அதை இறுதியில் ரணில் இல்லாதொழித்துவிட்டார். ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஆரம்பத்தில் மக்கள் அலை மெல்ல வீசியது. எனினும், சஜித்தின் இயலாமையை அறிந்த மக்கள் அந்தக் கட்சியை நிராகரித்து விட்டார்கள்.

ரணிலினதும் சஜித்தினதும் தலைவர் பதவி ஆசையே இந்த இரண்டு கட்சிகளினதும் வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாகும்." – என்றார்.

# நாளொன்றுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டுகள் அதிகரிப்பு




நாளொன்றுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை 2,500 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அன்னத விஜேபால தெரிவித்துள்ளார்.

இதுவரையான காலப்பகுதியில் நாளொன்றுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை 1,200 ஆகக் காணப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அவசர தேவைகள் நிமித்தம் வெளிநாடு செல்லவேண்டிய நிலையில், அதற்கமைய கடவுச்சீட்டுகளை வழங்குவதற்குத் தனியானதொரு கருமபீடம் நிறுவப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கருமபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், அந்த நபருக்கு உடனடியாக கடவுச்சீட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அன்னத விஜேபால தெரிவித்துள்ளார்.



# கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்களை விடுவிப்பதற்கான விசேட வேலைத் திட்டம்

கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக விசேட வேலைத் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், சுங்க அனுமதி பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை எனத் துறைமுக வார்ஃப் எழுதுவினைஞர்கள் கூறுகின்றனர்.

கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்ட நெரிசலை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக ஜனாதிபதியின் தலைமையில் அண்மையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அதன்போது, 24 மணி நேரமும் தாங்கள் கடமைகளில் ஈடுபட்டு இந்த நெரிசலை முடிவுக்குக் கொண்டுவரத் தயாராக இருப்பதாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான அறிக்கை ஒன்று சுங்க ஊடகப் பேச்சாளரும் மேலதிக பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கோட நேற்று வெளியிட்டார்.

இதன்படி, கொழும்பு துறைமுகத்திலிருந்து கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்ட பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் விசேட திட்டமொன்று செயல்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு துறைமுகத்திலிருந்து நேற்று மாத்திரம் 459 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாகவும், 242 கொள்கலன்களின் சோதனை நடவடிக்கைகள் நிறைவடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்க பரிசோதனையின் பின்னர் நாளொன்றில் சுமார் 500 கொள்கலன்களை விடுவிக்க முடியும் என்றாலும், அனுமதி முகவர்கள் மற்றும் கனரக சாரதிகளின் வருகை குறைவாக இருப்பதால் அதிகபட்ச அளவிலான கொள்கலன் வெளியீட்டை அடைய முடியவில்லை எனச் சுங்க ஊடகப் பேச்சாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கோட்டைக்கல்லாறில் விபத்து; சாரதி வானைக் கைவிட்டு ஓட்டம்

(றிபாஸ்)

மட்டக்களப்பிலிருந்து மருதமுனை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த டொல்பின் வான் நேற்று மாலை கோட்டைக்கல்லாறு புத்தடிக் கோயிலுக்கு அருகாமையில் பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட பெண் ஒருவருடன் மோதித் தள்ளியதில் அப்பெண் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



விபத்து நடந்த வானைச் செலுத்தி வந்த சாரதி வானைக் கைவிட்டுத் தப்பிச் சென்ற நிலையில் அவ்விடத்துக்கு சென்ற களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்தொ பகுதியில் பலத்த மழை பெய்து கொண்டு இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# சில நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு!

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, வெஹெரகல மற்றும் லுனுகம்வெஹெர நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி, லுனுகம்வெஹெர நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகளும் தலா 4 அங்குலம் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வெஹெரகல நீர்த்தேக்கத்தின் 4 வான் கதவுகள் தலா 4 அங்குலம் திறக்கப்பட்டு, அதன் நீர் மாணிக்க கங்கைக்கு வெளியேற்றப்பட்டுள்ளது.

இதனிடையே, மகாவலி ஆறு பெருக்கெடுத்ததன் காரணமான சோமாவதி விகாரைக்குச் செல்லும் வீதி நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தும்பை விட்டு வாலைப் பிடித்தல்

மாட்டையோ, கன்றையோ முளைக்குச்சியில் கட்டிப்போடுவதற்காக அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் நீளம் அதிகம் இல்லாத கயிறுக்கு 'தும்பு' என்பார்கள். மாட்டைக் கட்டிப்போட வேண்டுமென்றால் தும்பைத்தான் பலமாகப் பிடிக்க வேண்டுமே தவிர, அதன் வாலை அல்ல. வாலைப் பிடித்தால்

மாடு மிரண்டு ஓடிவிடும், காரியம் கெட்டுவிடும்.

அது போலத்தான் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்துதல் என்ற ஏற்பாட்டுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆரம்பித்திருக்கும் முயற்சிக்குப் பின்னால் சில தரப்புகள் செல்லும் போக்குத் தோன்றுகின்றது.

சுருக்கமாக சொல்வதானால் தும்பை விட்டு வாலை பிடிக்கும் வேலைதான் அது போல தெரிகிறது.

புதிய அரசமைப்பை உருவாக்கப் போகிறோம் என்ற தேர்தல் கோஷத்தோடு, அதை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பலத்துடன் அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அந்தப் பணியை ஆட்சியின் மூன்றாம் ஆண்டுக்குத் தள்ளிப் போட்டு விட்டது.

தேர்தலில் வென்று 100 நாள்களைக் கடந்து விட்ட ஜனாதிபதியும் இரண்டு மாதங்களைக் கடந்து விட்ட அரசாங்கமும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பாக திட்டவட்டமான கருத்து எதனையும் வெளியிடவில்லை. இலங்கையின் தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான சமிக்ஞைகளை கூட அரசு தரப்பு வெளியிடவில்லை.

அப்படி இருக்க திடுதிப்பென தமிழர் தரப்பில் அரசமைப்பு யோசனைக்கான ஒன்று பட்ட நிலைப்பாடு என்ற புதிய கருத்தை கஜேந்திரகுமார் தூக்கி இருக்கின்றமை ஏன் என்று விளங்கவில்லை.

தமிழ் தேசிய தரப்புக்களைப் பலவீனப்படுத்தி, தென்னிலங்கை ஆட்சி தரப்பு தமிழர் தாயகத்தில் கணிசமான அளவு ஊடுருவிக் காலூன்றி விட்டது. அதன் பாதிப்பை தமிழர் தேசம் உணர்ந்து நிற்கின்றது. இந்தச் சமயத்தில் வரப் போகின்ற உள்ளூராட்சித் தேர்தல்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களிலாவது இந்த நிலைமை மோசம் அடையாமல் பாதுகாப்பதுதான் இப்போதுள்ள முக்கிய பணி. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு தேர்தல்களை எதிர்கொள்வதன் மூலம் தமிழர் தேசத்தின் பிரதிநிதித்துவம் தென்னிலங்கை கட்சிகளுக்கு போவதை தடுப்பதுதான் இப்போது பிரதான பணியாக இருக்க வேண்டும்.

இவ்வளவு காலமும் ஒன்றுபட்ட திட்டங்களுக்காக முயற்சி எடுக்கப்பட்ட போதெல்லாம் மற்றைய தரப்புகளை கேவலமாக விமர்சித்து புறமொதுக்கி நின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போது திடீரெனத் தும்பை விட்டு வாலை பிடிக்க முயல்கின்றது.

இது தமிழ் தேசம் ஒன்றுபட்டு நின்று தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டிய வேளை. அதற்கு இணக்கமான சூழலை - கள நிலைமையை - ஏற்படுத்தாமல், மாறாக கொள்கை ரீதியான விடயங்களில் வாத விவாதங்களை நடத்தி, குழப்பம் ஏற்படுத்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றதோ என்ற ஒரு சந்தேகம் எழுகின்றது.

அரசமைப்பு உருவாக்கத்திற்கான செய்தி எதுவும் அல்லது கோடிகாட்டல் எதுவும் அரசு தரப்பிடமிருந்து வரவில்லை. அதுவும் தமிழர் தேசத்தில் கணிசமான பிரதிநிதித்துவ பங்களிப்பை முதல் தடவையாக பெற்றிருக்கும் சிங்கள தேசிய தரப்பிடம் இருந்து அதற்கான சிறு குறிப்பு கூட வெளியாகவில்லை. அப்படி இருக்கையில் தமிழர் தரப்பு அந்த விடயத்துக்காக ஏன் அடிபட்டு இப்போது ஒரு நிலைப்பாட்டை எடுக்க அவசரப்பட வேண்டும்? முதலில் அரசு தரப்பு - ஜனாதிபதி - அது பற்றிய கோடி காட்டலை வெளிப்படுத்தும் போது, ஒன்றுபட்டு கருத்தை வெளியிடுவது குறித்து ஆராயலாம்.

அடுத்தது - ஏற்கனவே இவ்விடயத்தில் முக்கிய தமிழர் தரப்புகள் ஒன்றுபட்டு, கொள்கை அடிப்படையில் ஓர் ஆவண ரீதியான இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றன. அதில் கஜேந்திரகுமார் தவிர ஏனைய தரப்பினர் எல்லோரும் ஒப்பமிட்டு இருக்கின்ற போது அதற்கு அப்பால் ஒன்றை நோக்கி அவசரப்பட்டு நகர வேண்டிய தேவை ஏன் இப்போது எழுந்துள்ளது?

முன்னைய கோட்டாபய ராஜபக்ஷ அரசின் காலத்தில் அரசமைப்பு உருவாக்கத்திற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் முன்னால் புதிய அரசமைப்பு நகலுக்கான யோசனை திட்டங்களை இலங்கை தமிழரசு கட்சி, ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக 2020 டிசம்பரில் ஓர் ஆவணத்தை சமர்ப்பித்து இருந்தன. அந்த ஆவணத்தில் இரா.சம்பந்தன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), சித்தார்த்தன் (புளொட்) ஆகிய தரப்பினர் ஒப்பமட்டிருந்தனர். அது மாத்திரமல்ல, மேற்படி நிபுணர் குழுவை 2021 ஜனவரியில் நேரடியாகச் சந்தித்து தங்கள் யோசனை திட்டத்தின் அடிப்படைகளை அவர்கள் விளக்கியும் இருந்தனர்.

அப்படி ஆவண ரீதியாக ஒன்று பட்ட ஒரு நிலைப்பாட்டில் தமிழ் தேசியத் தரப்புகள் இருக்கின்ற போது - அதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாத்திரம் சேர்ந்து ஒப்பமிட தவறிய காரணத்திற்காக - மீண்டும் ஒரு தடவை அதே விடயம் தொடர்பாகக் கூடி ஆராய வேண்டும் என்ற தேவை இப்போது எழவில்லை. அதுவும் அரசுத் தரப்பிடம் இருந்து ஒரு திட்டவட்டமான செய்தி வராத போது, இத்தகைய அவசரம் அவசியமற்றது. வேண்டுமானால் ஏற்கனவே இருக்கும் யோசனை திட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒப்பமிடுவதன் மூலம் அதனை வலுப்படுத்த முடியும்.

தவிரவும்,குறுகிய காலத்தில் வரக்கூடிய உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தமிழர் தரப்பின் பிரதிநிதித்துவம் தமிழ்த் தேசியத் தரப்புகளின் கைகளினின்றும் நழுவாமல் பாதுகாப்பதுதான் இன்று முக்கிய விடயம். அது பற்றித் தான் பேச வேண்டும் - அரசமைப்பு உருவாக்க இணக்கம் என்ற விடயத்தை தவிர்த்து. ஏனெனில், அந்த விடயத்தில் ஏற்கனவே ஆவண ரீதியான இணக்கத்துடன் கூடிய ஓர் உடன்பாடு தெளிவாக எழுத்தில் உள்ளது.



# தைப்பொங்கல் விடுமுறை: மீண்டும் பணிக்குத் திரும்ப விசேட போக்குவரத்து சேவை

தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடுவதற்காக தங்களது சொந்த ஊர்களுக்குச் சென்ற பொதுமக்கள் மீண்டும் பணிக்குத் திரும்புவதற்குத் தேவையான போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, பயணிகளின் தேவைக் கேற்ப மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ண ஹன்ச தெரிவித்துள்ளார்.

இதனிடையே, காங்கேசன்துறை மற்றும் பதுளை ஆகிய பிரதேசங்களிலிருந்து 3 விசேட ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# வெளிநாட்டவரிடம் லஞ்சம் பெற்ற இரு கான்ஸ்டபிள்கள் பணிநீக்கம்

மிதிகம பொலிஸ் நிலையத்தின் 2 கான்ஸ்டபிள்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு பெண்ணொருவரிடம் இருந்து லஞ்சம் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான கான்ஸ்டபிள்கள் கடந்த 31 ஆம் திகதி வெளிநாட்டு பெண்ணொருவரிடம் இருந்து 5,000 ரூபா லஞ்சமாகப் பெற்றுக்கொண்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# இரத்தினக் கற்களைக் கடத்த முயன்ற சீனப் பிரஜைகள் கட்டுநாயக்கவில் கைது

இரத்தினக் கற்களை உள்ளாடைகளில் மறைத்து வைத்துச் சீனாவுக்குக் கொண்டு செல்ல முயன்ற சீனாவைச் சேர்ந்த இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்தில் சுங்க அதிகாரிகளால், சீனப் பிரஜைகளான தந்தையும் மகளும் இவ்வாறு நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபரான 45 வயது தந்தையும் அவரது 21 வயது மகளும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றித் திரிந்து வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தமை தெரிய வந்துள்ளது.



இவர்கள் இருவருடமிருந்தும் சுமார் 17,450,875 ரூபா மதிப்புள்ள இரத்தினக் கற்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் இரவு 07.30 மணியளவில் சீனாவின் சோங்கிங் நோக்கிப் புறப்பட்ட, சோங்கிங் எயார்லைன்ஸ் OC-2394 என்ற விமானத்தில் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.



# வளத்தாப்பிட்டி வீதி முற்றாக மூழ்கியது!!

(தில்சாத் பர்வீஸ்)

சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டமை காரணமாக வளத்தாப்பிட்டி புகை பரிசோதனை நிலையத்திற்கு அருகாமையில் (அதாவது காஞ்சரையடி பொலிஸ் சோதனைச்சாவடி முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. அதனால் அந்த வீதி போக்குவரத்து முற்றாகத் தடைப் பட்டுள்ளது.

எனவே இப்பகுதியால் பயணம் செய்பவர்கள் மாற்று வீதியை பயன் படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி ஊடாகத் தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் எனப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுமி மீது பாலியல் சேஷ்டை புரிந்த லொத்தர் டிக்கெட் வியாபாரி கைது!

## வீரமுனைப் பிரதேசத்தில் சம்பவம்



(கே.எ.ஹமீட்)

வீரமுனை பிரதேசத்தில் லொத்தர் டிக்கெட் விற்பனை செய்யும் வயோதிபர் ஒருவர் 9 வயதுச் சிறுமி மீது பாலியல் சேஷ்டை செய்தார் என்ற சந்தேகத்தில் சம்மாந்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீரமுனை பிரதேசத்தில் நேற்று முன்தினன் திங்கட்கிழமை 9 வயதுடைய சிறுமி மீத்ய் பாலியல் சேஷ்டை புரிந்தார் எனச் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் சிறுமியின் தாயார் பதிவு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய லொத்தர் டிக்கெட் வியாபாரியை தேடி பொலிஸார் வீரமுனை பகுதியில் வாடகை வீட்டில் தங்கியிருந்து லொத்தர் டிக்கெட் விற்பனை செய்யும் அம்பாறை பிரதேசத்தை சேர்ந்த 69 வயது நபரைக் கைதுசெய்துளனர். அத்துடன் சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக சம்மாந் துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டியில் 19 காளைகளை அடக்கிய வீரருக்கு கார் பரிசு!

மதுரை அவனியாபுரத்தில் நடந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் 19 காளைகளைப் பிடித்த திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த கார்த்தி என்பவருக்கு முதல் பரிசாக காரும், கன்றுடன் கூடிய பசுவும் வழங்கப்பட்டன.

இதேபோல், சிறந்த காளைக்கான முதல் பரிசை வி.கே.சசிகலாவின் காளை வென்றது. காளை வளர்ப்பாளர் மலையாண்டி பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப்புகழ் பெற்றவை. இந்த ஆண்டு பொங்கலை ஒட்டி முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி மதுரை அவனியாபுரத்தில் காலை 6.30 மணிக்கு தொடங்கியது. இந்தப் போட்டியை தமிழக பத்திரப் பதிவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கிவைத்தார். விறுவிறுப்பாக நடந்த இந்த ஜல்லிக்கட்டுப் போட்டி 11 சுற்றுகளாக நடைபெற்றன.

மஞ்சள், இளஞ்சிவப்பு, நீல நிறம் அணிந்த வீரர்கள் சுற்றுக்கு தலா 50 பேர் வீதம் களம் கண்டனர். 10 சுற்றுகள் முடிந்த பிறகு, அனைத்து சுற்றுகளிலும் முன்னிலை வகித்த 30 பேர் வீரரகள் தேர்வு செய்யப்பட்டு, இறுதிச் சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டனர்.

இந்த இறுதிச் சுற்றின்போது மதுரை அவனியாபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. மழையைப் பொருட்படுத்தாமல், வீரர்கள் காளைகளை அடக்கியதை பார்வையாளர்கள் கண்டு ரசித்தனர்.

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டியில், பங்கேற்க 2,026 காளைகளும் 1,735 மாடுபிடி வீரர்கள் பதிவு செய்திருந்தனர். 925 காளைகள் பரிசோதனை செய்யப்பட்டு, 888 காளைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டு, அவிழ்க்கப்பட்டன. போலி ஆவணம், காயங்களுடன் கொண்டு வரப்பட்ட 37 காளைகள் தகுதி நீக்கம் செய்யப்பட்டன. இப்போட்டியில் 500 வீரர்கள் பங்கேற்றனர்.

வாடிவாசலில் இருந்து திமிறிக் கொண்டு வெளிவந்த காளைகளின் திமிலைப் பிடித்து வீரர்கள் அடக்கினர். விறுவிறுப்பாக நடந்த அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டியில் 19 காளைகளை அடக்கிய திருப்பரங்குன்றம் பகுதியைச் சேர்ந்த கார்த்தி என்பவர் முதலிடத்தையும், 15 காளைகளை அடக்கிய குன்னத்தூரைச் சேர்ந்த அரவிந்த் திவாகர் இரண்டாமிடத்தையும், 14 காளைகளை அடக்கிய திருப்புவனத்தைச் சேர்ந்த முரளிதரன் மூன்றாமிடத்தையும் பிடித்தனர்.

முதல் பரிசு பெற்ற மாடுபிடி வீரர் கார்த்திக்கு, 8.50 லட்சம் ரூபா மதிப்புள்ள நிசான் காரும், கன்றுடன் கூடிய பசுவும் வழங்கப்பட்டன. இரண்டாம் இடம் பிடித்த வீரருக்கு மோட்டார் சைக்கிள் பரிசாக வழங்கப்பட்டது. மூன்றாம் இடம்பிடித்த முரளிதரனுக்கு பரிசு வழங்கப்படவில்லை.

இதேபோல், இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் வி.கே.சசிகலாவின் காளை சிறந்த காளைக்கான முதல் பரிசை வென்றது. காளை வளர்ப்பாளரான மலையாண்டி பரிசைப் பெற்றுக் கொண்டார். முதல் பரிசாக 10 லட்சம் ரூபா மதிப்புள்ள உளவு இயந்திரமும், கன்றுடன் கூடிய பசுவும் வழங்கப்பட்டன. மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த் சார்பில் பசுவும் கன்றும் பரிசாக அளிக்கப்பட்டன

இந்தப் போட்டியில், பங்கேற்ற மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள், பார்வையாளர்கள், காவலர்கள் உட்பட 45 பேர் காளைகள் முட்டியதில் காயமடைந்தனர். இதில் 12 பேர் மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மேலும், போட்டியின்போது காளை ஒன்று மார்பில் முட்டியதில், படுகாயமடைந்து ரத்தக் காயங்களுடன் மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நவீன் என்பவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

# மாடு முட்டி காயமடைந்த வீரர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

மதுரை அவனியாபுரத்தில் நடந்து வரும் ஜல்லிக்கட்டுப் போட்டியில் மாடு முட்டியதில் காயமடைந்த மாடுபிடி வீரர் நவீன் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவனியாபுரத்தில் நடந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் மதுரை விளாங்குடியைச் சேர்ந்த நவீன் கலந்து கொண்டிருந்தார். களத்தில் சீறிப்பாய்ந்த காளை ஒன்று நவீனின் மார்பில் முட்டியது. இதில் பலத்த காயமடைந்த நவீனை, இரத்தக் காயங்களுடன் அங்கிருந்த மருத்துவக் குழுவினர் மீட்டு, மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு நவீனுக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டது. ஆனால், சிகிச்சைப் பலனின்றி மாடுபிடி வீரர் நவீன் உயிரிழந்தார். இந்த சம்பவம் அந்தப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல், அவனியாபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த ஜல்லிக்கட்டு தடுப்புகள் இடிந்ததில் சிறப்பு உதவி ஆய்வாளர், பொலிஸார் இருவர் உட்பட மூன்று பேர் காயம் அடைந்துள்ளனர்.







# காசா – இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தில்; கட்டார் அறிவிப்பு

காசாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தில் உள்ளதாக முக்கிய மத்தியஸ்த நாடான கட்டார் அறிவித்துள்ளது.

பாலஸ்தீன அதிகாரி ஒருவரின் தகவல்களுக்கு அமைய, இஸ்ரேல் மற்றும் ஹமாஸின் பிரதிநிதிகள் முதன்முறையாக ஒரே கட்டடத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கமைய, முதல் நாளில் 3 பணயக் கைதிகள் ஹமாஸ் தரப்பினரால் விடுவிக்கப்படுவார்கள்.

இதனையடுத்து இஸ்ரேல் இராணுவ துருப்பினரை மீளப் பெறத் தொடங்கும் எனப் பாலஸ்தீன அதிகாரிகள் ஒருவர் கூறியுள்ளார்.

# வட கொரியா உட்பட 20 நாடுகளுக்கு பயணம் செய்ய வேண்டாம்

## அமெரிக்க அரசாங்கம் எச்சரிக்கை




வட கொரியா, ரஷ்யா உட்பட 20 நாடுகளுக்குப் பயணம் செய்ய வேண்டாம் என்று அமெரிக்க அரசாங்கம் அந்நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்த பட்டியலில் வட கொரியா, ரஷ்யா, ஈரான், ஈராக், உக்ரைன், ஆப்கானிஸ்தான், பெலாரஸ், சிரியா, லெபனான், லிபியா, சோமாலியா, சூடான், வெனிசுலா மற்றும் ஏமன் உள்ளிட்ட 20 நாடுகள் இடம் பெற்றுள்ளன.

மேற்படி, நாடுகளில் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் ஏற்படும் என்றும் பாதுகாப்பு காரணங்களைக் கருத்தில் கொண்டு இந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் அந்நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# பால்டிக் கடலில் பயணிக்கும் கப்பல்களை கண்காணிப்பதற்கு நேட்டோ புதிய திட்டம்




பால்டிக் கடலில் பயணிக்கும் கப்பல்களைக் கண்காணிப்பதற்கு நேட்டோ அமைப்பு புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் அதிக சோதனை விமானங்கள், போர்க் கப்பல்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்படும் என நேட்டோ அமைப்பின் தலைவர் மார்க் ரூட்டே தெரிவித்துள்ளார்.

நேட்டோ நாடுகளான பின்லாந்து, எஸ்டோனியா, டென்மார்க், ஜேர்மனி, லாட்விய, லிதுவேனியா மற்றும் சுவீடன் போன்ற நாடுகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற உச்சி மாநாட்டில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தினூடாக தடை செய்யப்பட்ட எண்ணெய்ப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ரஷ்யாவின் நிழற் கடற்படை கப்பல்கள் தொடர்பில் அதிகளவில் கண்காணிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

தேவையேற்பட்டால் சந்தேகத்துக்கிடமான கப்பல்கள் கைப்பற்றப்படும் எனவும் நேட்டோ அமைப்பின் தலைவர் மார்க் ரூட்டே தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.01.2025




இன்று நீங்கள் செய்யும் எந்தச் செயலிலும் உணர்ச்சி வசப்பட வேண்டாம். நிதானமாகச் செயல்படுவதன் மூலம் நீங்கள் எதிர்மறை விளைவுகளைத் தவிர்க்கலாம். இன்று நீங்கள் வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் மனம் அமைதியடையும்.

இன்று தொழிலில் முன்னேற்றத்துக்கான வாய்ப்பு இல்லை. பணியில் சுமை அதிகமாக இருக்கும்.பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளவும்.

உங்கள் மனநிலையில் ஏற்படும் மாறுபாடு காரணமாக உங்கள் துணையிடம் மகிழ்ச்சியை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் யதார்த்தமாகவும் சந்தோஷமாகவும் இருப்பது நல்லது.

செலவுகள் சற்று அதிகமாகக் காணப்படும். பணத்தை சிக்கனமாகக் கையாளவும். தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும்.




சூழ்நிலைக்குத் தக்கவாறு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு விஷயத்தையும் பக்குவமாக அணுகுவதன் மூலம் வேறுபாடுகளைத் தவிர்க்கலாம்.

பணியில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணிச்சுமை அதிகமாகவும் கவலை தருவதாகவும் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் இருக்கும். அதனால் உங்கள் மகிழ்ச்சி பாதிக்கப்படலாம்.

நிதிநிலையில் அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். நிதிசம்பந்தமான விஷயங்களை கவனமாகக் கையாள வேண்டும்.

கண்களில் ஏற்படும் எரிச்சல் பாதிப்புகளை உண்டாக்கும் என்பதால் அதன் தீவிரத்தை உணர்ந்து கவனமாக இருக்க வேண்டும். அஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.




இன்று உங்களுக்கு மிகவும் முன்னேற்றமான நாளாக அமையும். வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்ந்து புதிய அனுபவங்களின் மூலம் நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படும் நாள்.

உங்கள் பணி மற்றும் தொழிலில் முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களது செயல்திறனில் திருப்திகரமான நிலை இருக்கும்.

இன்று கணவன் மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இனிமையான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு இலாபகரமான நாளாக அமையும். பணத்தை உபயோகமான விஷயத்திற்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று நீங்கள் தன்னம்பிக்கையுனும் அமைதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும் நாள். ஊக்கம் மற்றும் உற்சாகத்துடன் காணப்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள் அனைத்து விதத்திலும் இன்று வளமான நாள்.

புதிய வாய்ப்புகள் அமைந்து வளர்ச்சிக்கு வழி வகுக்கும். பணி மற்றும் தொழில் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் திருப்தி அளிக்கத் தக்க வகையிலும் காணப்படும்.

உங்கள் வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக வெளியே செல்வீர்கள். சந்தோஷத்தை அனுபவிக்கும் நாளாக அமையும்.

வருமானம் அதிகரிப்பதற்கான சாத்தியம் உளளது. நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான சூழ்நிலை காணப்படுகிறது. தேவையற்ற விஷயங்கள் சிந்திப்பதை தவிர்க்கவும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

வேலையில் கூடுதல் கவனம் செலுத்தவும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று எளிதில் உணர்ச்சி வசப்படும் நாளாக இருப்பதினால் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நட்புறவுடன் நடந்து கொள்ள முயற்சி செய்யவும்.

கவனச் சிதைவால் பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகள் செய்ய நேரிடும். எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

மன அழுத்தத்தின் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று உங்கள் தன்னம்பிக்கையும் உற்சாகமும் குறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பணிச் சுமை அதிகமாக இருக்கும். தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதினால் பணிகளை திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.

உங்கள் வாழ்க்கை துணையாரால் புறக்கணிக்கப்படுவதாக உணர்வீர்கள். பரஸ்பர உரையாடல் மற்றும் புரிந்துணர்வு மூலம் அதை தீர்க்கலாம்.

இன்று பண பரிவர்த்தனையில் சற்று சிரமங்கள் ஏற்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

தேவையற்ற கவலைகளின் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு காணப்படுகின்றது ஆரோக்கியமாக இருப்பதற்கு மனதை நிலையாக வைத்திருங்கள்.




இன்று சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடன் இருப்பீர்கள். விரைவான முடிவு எடுப்பதற்கான அநுகூலமான மனநிலையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் உணர்வுகளை சக பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விழாவினைப்பற்றி உங்கள் துணையாருடன் கலந்தாலோசிப்பீர்கள். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்கள் சேமிப்புகளை அதிகரித்துக்கொள்ளும் நல்ல வாய்ப்பு இருக்கின்றது. உங்கள் நெருக்கமானவர்களுடைய விருந்தில் கலந்து கொள்ள பணத்தை செலவிடுவீர்கள்.




இன்று எளிதில் வெற்றி கிடைக்க சாத்தியம் உள்ளது. உங்கள் திறமையான தகவல் தொடர்பின் மூலம் மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். உங்கள் அனுகுமுறை வெற்றிச் சிகரங்களைத் தொட உங்களுக்கு உதவும்.

இன்று சவாலான பணிகளை எளிதில் எதிர்கொள்வீர்கள். உங்கள் பணிகளை எளிதில் விரைந்து முடிப்பீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையாருடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நட்பான அனுகுமுறை அவருக்கு திருப்திகரமானதாக இருக்கும்.

இன்று கையிருப்பு பணத்தைக் கொண்டு வசதியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.01.2025




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். இலக்கில் வெற்றி காண்பதை கடினமாக உணர்வீர்கள். மன அழுத்தத்தை போக்க யோகா அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும் நாள். அதிக வேலை காரணமாக அதை முடிப்பதில் சிரமும் எரிச்சலும் இருக்கும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் வாழ்க்கைத் துணையாரின் தவறுகளை சுட்டிக்காட்டுவீர்கள்.

இன்று பணவரவுக்கான சாதகமான சூழ்நிலை இல்லை. அதனால் சேமிப்பும் இருக்காது.

இன்று ஆரோக்கியம் ஊக்கமளிக்கும் வகையில் இருக்காது. சளி மற்றும் தலைவலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். புதிய மனிதர்கள் மற்றும் புதிய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அவர்களை சந்திப்பதன் மூலம் உங்கள் மனதில் மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்படும்.

பணியிடத்தில் சந்திப்புகளின் பொழுது நீங்கள் புதுமையான கருத்துக் களைக் கூறுவீர்கள். இதை உங்கள் மேலதிகாரிகள் ஒப்புக்கொண்டு பாராட்டுவார்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் உங்கள் துணை யுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப் புழக்கம் சிறப்பாக காணப்படும். உங் களால் சேமிப்பை உயர்த்த முடியும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள்.




இன்றைய நாள் உங்கள் முற் போக்கான வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. எதையும் சமநிலையோடு அனுக வேண்டும் புத்திசாலிதனத்தை பயன்படுத்தி சவால்களை சமாளிக்க வேண்டும்.

இன்று கவனக்குறைவு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணிகளை கவனத்துடன் செய்ய வேண்டும். உங்கள் பணியை திறம்பட செய்வதற்கு உங்கள் சக பணி யாளர்களின் அறிவுரையை ஏற்று அதன் படி செயல்பட வேண்டும்.

இன்று பதட்டத்துடன் காணப்படுவீர்கள். அதன் விளைவாக காரணமே இல்லாமல் உங்கள் துணையிடம் குற்றம் கண்டுபிடிப்பீர்கள்.

இன்று பண வரவு சுமாராக இருக்கும். இன்று நிதி நிலையை மேம்படுத்துவதற்கான அதிர்ஷ்டம் இல்லை.




இன்று அசௌகரியங்கள் காணப் படும். சவால்களை சமாளிக்க இன்று நீங்கள் உங்கள் பணிகளைத் திட்ட மிட வேண்டும். தளரா நம்பிக்கையுடன் தேவையற்ற எண்ணங்களிலிருந்து விடுபடவேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சாதகமான பலன்களைக் கொடுக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரனையான போக்கை மேற்கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்

இன்று பண வரவுக்கான சாத்தியம் இல்லை. உங் களிடம் உள்ள பணத்தைக் கொண்டு உங்கள் பணத் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.





# தண்ணிமுறிப்புக் குளம் வான் பாயும் நிலையில்!

## அவதானமாக இருக்க அனர்த்த முகாமைத்துவத்தினர் அறிவுறுத்தல்

(பா.சதீசன்)

தண்ணிமுறிப்புக் குளத்திற்கு நீரின் வரத்து அதிகரித்ததன் காரணமாக நீர்மட்டம் உயர்ந்து வருவதால் தண்ணி முறிப்புக் குளம் வான்பாயக்கூடிய சந் தர்ப்பம் காணப்படுவதாக முல்லைத் தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தண்ணிமுறிப்புக் குளமானது 21 அடி வரை நீரை சேமிக்க கூடியதாக இருக்கின்ற நிலையில் தற்போது 20 அடி 20 அங்குலம் வரை நீர் மட்டம் உயர்ந்த நிலையிலே இந்த அறிவித் தல் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பெய்யும் கனமழை காரணமாக தண்ணிமுறிப்பு குளம் வான்பாயக்கூடிய சந்தர்ப்பம் காணப படுகிறது. எனவே குளத்தின் கீழ்பகுதி யில் இருக்கின்ற மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள் என முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் நேற்று மாலை வெளியிட்டுள்ள அறி விப்பில் தெரிவித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப் படும் குளங்களுள் நான்காவது பெரிய குளம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.